மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1989 ஜூலை மாதத்தில் கடித எண் 932/85/என்ஐடி/நாள் 10—7—1979இல் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தை மத்திய அரசு உதவியுடன், சொட்டுத் தெளிப்பு நீர்ப் பாசன முறையை ஊக்கப்படுத்தும் திட்டத்தை, பிளாஸ்ட்டிக் கல்ச்சர் திட்டத்தின் கீழ் இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் உதவியுடன் செயல்படுத்த கருத்துரு ஒன்றை நம்முடைய மாநில அரசாங்கத்திடம் கேட்டார்கள். நம்முடைய அரசு அந்தக் கருத்தின் அடிப்படையில் 1989 இல் இந்த அரசு பொறுப்பேற்ற உடன், மத்திய அரசாங்கத்துக்கு அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு அறிக்கையை அவர்களுக்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். மத்திய சர்க்காரிடம் இருந்து அதற்கான அனுமதி இன்னும் வரவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் அனுமதி வராமல் கூட நம்முடைய மாநில அரசு செய்வதற்கு எண்ணங்கள் இருக்கின்றனவா? ஏனென்றால் விவசாயிகள், அது கிடைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று கூறுகிறார்கள். எல்லாத் துறையிலும் பிளாஸ்ட்டிக் சாதனங்கள் வந்துவிட்டன. விவசாயத் துறையில் மாத்திரம் தான் அது இல்லை. குறிப்பாகச் சொன்னால் கடலைப் பருப்பு உடைக்கின்ற இயந்திரம் தயாரித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இதுபோன்றவைகளை எல்லாம் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் தொடங்குவதற்கு மாநில அரசுக்கு எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

*1632—திரு. கோ பூவராகன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1991 சனவரி 21]

(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரு சுரங்கத்திலிருந்தும் வெளியேற்றப்படும் தண்ணீர் அந்நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் இரண்டு அனல் மின் நிலையங்களைக் குளிரூட்டவும், உரத் தொழிற்சாலை மற்றும் நகரிய உபயோகத்திற்கும் பயன்படுத்தப்பட்டது போக எஞ்சிய உபரிநீர் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 24,993.62 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசனத்திற்குத் துணை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

10–00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீர் அவர்கள் உபயோகத்திற்குப் போக, மீதி எவ்வளவு நமது தேவைக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்? இப்போது பாய்கிற நிலங்கள் எல்லாம் ஏற்கெனவே மேட்டூர் நீர் பாய்கின்ற இடங்கள் தான். ஆனால் நெய்வேலியில் இறைக்கப்படுகிற நீரை, பக்கத்தில் மேற்குப் புறங்களில் நீர் ஆதாரம் இல்லாத இடங்களுக்கு அனுப்பாமல் வேறு இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் நீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே எடுக்கின்ற நீரை, இதுவரை பாயாத பகுதிகளுக்கு, அதாவது மேற்குப் பகுதி மற்றும் தெற்குப் பகுதிக்குச் கொண்டு செல்வதற்கானத் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, முதல் சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் உபரி நீர் மூலம் பாசனம் பெறுவது 3,162 ஏக்கர் நிலங்கள். இரண்டாவது சுரங்க உபரி நீர் மூலம் — இந்திரா காந்தி அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ள சுரங்க உபரி நீர் மூலம் பாசனம் பெறுவது 6,590 ஏக்கர். இரண்டு உபரி நீரும் இல்லாமல், வாலாஜா ஏரியில் ஆயக்கட்டுப் பாசனம் பகுதிகளின் அளவு 10,254 ஏக்கர். பெருமாள் ஏரியிலிருந்து பயன் பெறுவது 4,987 ஏக்கர். கோடைக் காலங்களில் வினாடிக்கு 25 கன அடி வீதமும், மற்றக் காலங்களில் வினாடிக்கு 65 கன அடி வீதமும் தண்ணீர் கிடைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு தண்ணீரும் கிட்டத்தட்ட 25,000 ஏக்கர் அளவுக்குப் பாசனம் பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, அவர்கள் நேரடியாகக் கேள்வி கேட்கா விட்டாலும், விருத்தாசலம் அணைக்கட்டுக்குக் கொண்டுவந்து அதை வலது புற பிரதான கால்வாயில் விடமுடியுமா என்பதுதான் கேள்வி. ஆனால் அது மேற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஆகவே, அங்கே தண்ணீர் போகாது. எனவே, அந்தத் தண்ணீரை அங்கே கொண்டுபோய் விட வேண்டுமானால், பம்ப்பிங் மூலம்தான் கொண்டு போக முடியும். எனவே, அது இயலாது. மற்றப் பகுதி

களுக்கு விஸ்தரிக்க, அந்த நிறுவனத்துடன் பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே இந்தப் பகுதிகளில்தான் விஸ்தரிக்கப்பட முடியுமே தவிர, விருத்தாசலத்திற்குக் கொண்டுவருவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சுரங்கத்தில் தண்ணீர் எடுத்து இறைக்கும் பகுதிகளில், ஏற்கெனவே பாசன வசதிக்கு அரசாங்கம் உறுதி செய்த பகுதிகள்தான். அங்கேதான் மீண்டும் இறைப்புத் தண்ணீர் போகிறது. ஆனால் தண்ணீர் மேற்குப் பகுதிகளுக்குத் தான் தேவை. அங்கே நிலத்தடி நீர் இல்லை. மிகவும் வறட்சியான பகுதிகளைப் பாதுகாக்க, இப்போது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த நிறுவனத்திடம் இருந்து ராயல்டியாக ரூபாய் 30 கோடி பெற்றிருக்கிறார்களே, அதிலிருந்து 1 கோடி ரூபாயையாவது செலவு செய்து அங்கே தண்ணீர் கொண்டுவர வேண்டும். இறைக்கிற தண்ணீரைக் கொஞ்சம் தூக்கி இறைத்தால் வீராணம் குழாய்களையும் பயன்படுத்தினால் அந்தத் தண்ணீர் மேற்குப் பகுதிக்கு வந்துவிடும். அதுகுறித்து நெய்வேலி நிறுவனத்துடன் பேசி, அவர்கள் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டால், பல கிராமங்கள் பயன் அடையும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அங்கே நேரில் சென்று பார்த்துவிட்டு, அதற்கு அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தில் எனக்கு முரண்பாடான எண்ணம் இல்லை. இயலாமையைத்தான் நான் சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மனம் மகிழ்ச்சியடையத்தக்க வகையில் ஒரு நல்ல செய்தி. அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவர்களோடு பேச வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நமது அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களும் சமீபத்தில் அதுகுறித்து அந்த நிறுவனத்துடன் பேசிவிட்டு வந்திருக்கிறார். வாய்ப்புக் கிடைத்தால், விரைவில் இது குறித்து அந்த நிறுவனத்துடன் நான் நேரில் பேசி, நடவடிக்கை எடுககலாம். உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றலாம்.

ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரும் தண்ணீரை எடுத்தல்.

*8397—திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரக்கூடிய தண்ணீரை இடைமறித்து ஆயில் இன்ஜின்கள் மூலம் புஞ்சை நிலங்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்தக் கோரி அப்பகுதி விவசாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?